மாண்புமிகு பேரவைத் தலைவர்: சாத்தான் குளத்தில் விழ மாட்டார் என்ற உறுதிமொழியை உங்களுக்கு நினைவூட்ட விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி என்கிற தெய்வசிகாமணி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த உறுதி மொழியை மாண்புமிகு முதல்வர் அவர்களே கொடுத்திருக்கிற காரணத்தால், நிச்சயமாக அது எடுத்துக்கொள்ளப்படும் என் பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

கூட்டுக் குடிநீர்த் திட்டம்.

* 5318. திரு க. பழனிசுவாமி :

மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :

நெடுங்குளத்திலிருந்து ராசிபுரம் வரை உலக வங்கி மூலமாக அமைக்கவிருக்கும் கூட்டுக் குடிநீர்த் திட்டம் தற்போது எந்த நிலையில் உள்ளது ?

மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி என்கிற தெய்வசிகாமணி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

நெடுங்குளத்திலிருந்து ராசிபுரம் வரை நிறைவேற்றப் படவிருக்கும் கூட்டுக் குடிநீர்த் திட்டம் உலக வங்கி மூலமாக அமைக்கப்படவில்லை. எனினும் ஆயுள் காப்பீட்டுக் கழக நிதி உதவியுடன் மேற்கொள்ளப்படுகிறது. இத்திட்டம் தற்போது செயலாக்கத்தில் உள்ளது. திட்டம் 1992 ஆம் வருடம் முடி வடையுமென எதிர்பார்க்கப்படுகிறது.

திரு. க. பழனிசுவாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நெடுங்குளத்திலிருந்து ராசிபுரம் வரையில் செல்லும் என்று கூட்டுக் குடிநீர் திட்டம் அனுமதிக்கப்பட்டு 2 ஆண்டுகள் ஆகிறது. போன வருடம் 45 இலட்சம் ரூபாயும் நடப்பு ஆண்டில் 2 கோடி ரூபாயும் ஆக மொத்தம் 2½ கோடி ரூபாய்தான் செலவழிப்பதாகத் தெரிவிக்கப்பட்டிருக்கிறது. இந்தத் திட்டத் தினுடைய மதிப்பீடு மொத்தம் 20 கோடி ரூபாய். 3 ஆண்டு களாகியும் இதுவரை 2½ கோடி ரூபாய்தான் செலவழிக்கப்பட்ட தாகக் கூறியிருக்கிறார்கள். இன்னும் 17½ கோடி ரூபாய் செலவழிக்க பல ஆண்டுகளாகும் போலத் தெரிகிறது. ஆகவே நடப்பு ஆண்டில் நிதியை அதிகப்படுத்தி அந்தத் திட்டத்தை விரைவாக முடிக்க அரசு முன் வருமா என்று அறிய விரும்பு கிறேன்.

மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி என்கிற தெய்வசிகாமணி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஆரம்பப் பணிகள் எப்போதும் சிறிது காலதாமதம் ஆகின்றது. காரணம் நில ஆர்ஜிதம் செய்யப்படுவதாலே ஏற்படுகின்ற பிரச்சினைகள். ஆகவே, நில ஆர்ஜிதம் செய்யப்படுவதாலே ஏற்படு ன்ற அந்தப் பிரச்சினைகளெல்லாம் நீக்கப்பட்டு, அந்தப் பணி விரைவுபடுத்தப் பட்டிருக்கிறது. ஆகவே, அந்தத் திட்டம் விரைவில் நிறைவேறும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. க. பழனிசுவாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தத் திட்டத்தில் வறட்சியால் கடுமையான குடி தண்ணீர் தட்டுப்பாடு ஏற்பட்டுள்ள சித்தூர், இருப்பாளி தாராபுரம், வைகுந்தம் போன்ற ஊராட்சிகளையும் சேர்த்து விரிவுபடுத்த அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி என்கிற தெய்வசிகாமணி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அரசு பரிசீலிக்கும்.

சாவடிப்பாளையம் ஆரம்ப சுகாதார நிலையம்.

*6306. திரு. பி. மாரப்பன் :

மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :

காங்கேயம் தொகுதி, சாவடிப்பாளையம் ஆரம்ப சுகாதார நிலையத்திற்கு மேலும் 2 டாக்டர்கள் நியமனம் செய்யும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா ?

மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி என்கிற தெய்வசிகாமணி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, காங்கேயம் தொகுதி, சாவடிப்பாளையம் ஆரம்ப சுகாதார நிலையத்திற்கு மேலும் இரண்டு மருத்துவ அலுவலர்கள் நியமனம் செய்வது குறித்து செயற்குறிப்பு எதுவும் அரசிடம் இல்லை.

திரு. பி. மாரப்பன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சாவடிப்பாளையம் என்ற ஊரிலேயிருந்து ஈரோட் டிற்குச் செல்ல வேண்டியதாக இருந்தால் 50 மைல் போக வேண்டும். திருப்பூருக்குப் போக வேண்டுமென்றால் 30 மைல் செல்ல வேண்டும். கோவையாக இருந்தால் 60 மைல் செல்ல வேண்டும். அப்படிப்பட்ட ஒரு இடத்திலே ஒருவர் நன்கொடை கொடுத்து ஆஸ்பத்திரி கட்டிக்கொடுத்து இருக்கிறார். அந்த இடத்திலே, தேவையான டாக்டர்களை இந்த அரசு நியமிக்காமல், முதலில் ஒருவரை நியமித்தார்கள். யார் வந்தாலும் அவர்கள் லீவ் போட்டுவிட்டு போய்க் கொண்டே இருக்கிறார்கள்.